நிறுவனத்திலே பதிவு செய்தவர்களின் எண்ணிக்கை 5,517 ஆகும். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்த நிறுவனத்தின் மூலமாக வெளிநாடுகளுக்கு அனுப்பப்பட்டவர்களின் எண்ணிக்கை 200 பேர்கள் தான் என்று சொல்வது தவறான தகவல். அந் நிறுவனம் துவங்கப்பட்ட நாளிலிருந்து 31—12—1981 வரை 423 பேர் அயல்நாடுகளுக்கு வேலைவாய்ப்பு பெறுவதற்காக அனுப்பப்பட்டிருக்கிறார்கள்.

(முற்பகல் 10.10)

திரு. கே. எஸ். ஜி. ஹாஜா செரீப் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசு அதற்காக நிறுவனம் ஏற்படுத்தியிருந்தாலும் கூட, பல்வேறு தனியார் நிறுவனங்கள், இதற்காக பதிவு செய்து கொண்டு, மோசடி செய்து வருகிறார்களே, அதை தடை செய்வ தற்கு, இந்த அரசு உடனடியாக நடவடிக்கைஎடுக்க முன் வருமா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே இதற்காக விடையளித் திருக்கிறேன். இதனை குறித்து பரிந்துரை செய்வதற்குத்தான் தமிழக அரசால் முடியுமே தவிர, தடை செய்வதற்குரிய அதி காரம் இல்லை. அதனை மத்திய அரசுதான் செய்ய வேண்டும். தமிழக அரசு நிச்சயமாக பரிந்துரை செய்யும்.

மதுரை மாவட்ட ஆதிவாசி மற்றும் பழங்குடி மக்களுக்கு குதிரைகள் வழங்கும் திட்டம்.

*வினா எண் 339—திரு. என். பழனிவேல்: மாண்புமிகு ஆதிதிரா விடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டத்தில் வசிக்கும் ஆதிவாசி பழங்குடி மக்களுக்கு இலவசமாக குதிரைகள் வாங்கிக் கொடுக்கப்படு கின்றதா ?

(ஆ) ஆம், எனில் கடந்த 3 ஆண்டுகளில் எவ்வளவு பேர் களுக்கு வாங்கித் தரப்பட்டது ?

(இ) அதன் மதிப்பு எவ்வளவு ?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : (அ) ஆம்.

(ஆ) 18 பேர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது.

(இ) அதற்காக ரூ. 10,800 செலவிடப்பட்டுள்ளது.

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரிசனங்களுக்கும், ஆதித்திராவிடர்களுக்கும், இலவசமாக மாடுகள், கால்நடைகள் வாங்கிக் கொடுக்கும் இந்த திட்டத்தில், மதுரை மாவட்டத்தில், கொடைக்கானல் தாலுக்காவில் மலைகளில் வசிக்கக் கூடிய பழங்குடி மக்கள் இருக்கிறார்கள். அவர்களில் 18 பேர்களுக்கு மட்டும்தான் வாங்கிக் கொடுத்திருப்பதாகச் சொன்னார்கள். என்னென்ன வாங்கிக் கொடுத்தார்கள்? குதிரைகள் வாங்கிக் கொடுத்தார்களா ? கழுதைகள் வாங்கிக் கொடுத்தார்களா என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா ?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : பேரவைத் தலைவர் அவர்களே, கொடைக்கானல் பகுதியில் மலைப்பிரதேசங்களில் இருக்கக்கூடிய பழங்குடி மக்களின் உபயோகத்திற்காக தற்போது, ஒவ்வொரு ஆண்டும்—இந்த மாவட்டத்தைப் பொறுத்தவரையில் — 2 தாலுக்காக்களை தேர்வு செய்து, மட்டக் குதிரைகள் வாங்கிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதற்காக 600 ரூபாய் வீதம் செலவிடப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு வருடமும் 6 நபர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்களுக்கு, அந்தத் தொகையை செலவிடும்பொருட்டு, மட்டக் குதிரைகள் வாங்கிக் கொடுக்கப்படுகிறது.

திரு. என். பழனிவேல் : தலைவர் அவர்களே, மட்டக் குதிரைகள் வாங்கிக் கொடுப்பதற்காக ஒவ்வொன்றிற்கும் 600 ரூபாய் செலவாகிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இன்றைய விலைவாசியில் 600 ரூபாய்க்கு குதிரைகள் வாங்குவது என்பதில், அந்தக் குதிரைகள் எந்த விதமான உபயோகத்திற்கும் பயன்படாததாகவே இருக்கும். அந்தத் தொகையை அதிகரித்துக் கொடுக்க வேண்டும். அடுத்ததாக, இந்தப் பழங்குடியினர் மலைகளில் வசிப்பதால், அவர்களுடைய பொருள்களை கீழே சுமந்து வர அவர்களுக்கு கழுதைகள் அதிகமாக தேவைப்படுவதால், அதையும் வாங்கிக் கொடுக்க அரசு முன் வருமா ? மேலும் 18 பேர்கள் என்பதை அதிகப்படுத்தி, அந்த தாலுக்காவைப் பொருத்த அளவில் 100 பேருக்காவது வழங்குவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : பேரவைத் தலைவர் அவர்களே, மலையிலிருந்து பொருள்களைக் கீழே கொண்டு வருவதற்காகத்தான், அரசு வழங்கும் இந்த மட்டக் குதிரைகளை அவர்கள் பயன்படுத்துகிறார்கள். அந்தத் தொகை மிகவும் குறைவாக இருப்பதை உணர்ந்துதான், இதை 600 ரூபாயிலிருந்து, 1,000 ரூபாய் வரை உயர்த்த வேண்டும், என்று ஆதி திராவிடர் பழங்குடிமக்கள் நலத் துறை இயக்குநர் அவர்கள் கருத்துரு ஒன்று அனுப்பியிருக்கிறார்கள். அது அரசின் பரிசீலனையில் இருக்கிறது. அதை பரிசீலனை செய்து விரைவில் அதற்கான

1982 மார்ச் 3]

ஆணையை வழங்க அரசு முயற்சித்து வருகிறது. மட்டக் குதிரை களுக்குப் பதிலாக கழுதைகள் வழங்கவேண்டும் என்று கூறியிருக் கிறார்கள். அவைகளையும் அரசு பரிசீலனை செய்யும்.

திரு. ஆர். டி. கோபாலன் : பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டத்தில் வசிக்கும் ஆதித்திராவிட பழங்குடி மக்கள் எங்கெங்கே இருக்கிறார்கள். அவர்களுக்கு மட்டக் குதிரையை இலவசமாக வழங்குவது தவிர, வேறு என்னென்ன உதவிகளை அரசு செய்து வருகிறது என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டத்தில் மட்டும் இன்றி, தமிழகத்தில் இருக்கக்கூடிய அனைத்து பழங்குடியினருக்கும் சிறப் பான வகையில் பல்வேறு வசதிகளைச் செய்து தரவேண்டும் என்ற எண்ணத்தோடு, பழங்குடியினர் துணைத் திட்டம் என்ற பெயரில் ஒரு திட்டத்தைத் தீட்டி அரசு செயல்படுத்தி வருகிறது. அதில் ஏறக்குறைய 6-வது ஐந்தாண்டு திட்டக் காலத்திற்குள் 2,896 லட்சத்தை செலவு செய்ய வேண்டும் என்ற உணர்வோடு பல்வேறு வகையிலான பணிகளை அரசுமேற் கொண்டு வருகிறது. அவர்கள் உயர்வடைவதற்காகவும், மற்ற அனைத்து வசதிகளை யும் பெறுவதற்காகவும், பல்வேறு திட்டங்கள் இந்தப் பழங்குடி யினர் துணைத் திட்டத்தின்கீழ் வகுக்கப்பட்டு செயல்படுத்தப் படும்.

மணப்பாறையில் தொழிற்பயிற்சி நிலையம் அமைக்கும் திட்டம்.

* வினா எண். 340—திரு. இரா. கருப்பையா : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மணப்பாறையில் தொழில் பயிற்சி நிலையம் (Indus ri l Tr ining Ins.i ut) அமைக்க திருச்சிராப்பள்ளி மாவட்ட அபிவிருத் திக்குழு (Developmen. Council) பரிந்துரை செய்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அரசு எடுத்த நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : (அ) ஆம்.

(ஆ) திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலேயே அரியலூர் மற் றும் திருச்சிராப்பள்ளி ஆகிய இரு இடங்களில ஏற்கனவே தொழிற் பயிற்சி நிலையங்கள் இருப்பதாலும் மணப்பாறையில் செயின்ட் ஜான் தொழிற்பள்ளி இருப்பதாலும் அரசின் நிதி நிலைமை காரணமாகவும் மணப்பாறையில் மற்றுமொரு தொழிற்பயிற்சி நிலையம் தற்போது ஏற்படுத்த இயலாது.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS